1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : நான் சொன்ன விடையில் ஆண்டுக்காண்டு வருவாய் குறைவதாகச் சொல்லவில்லை. 1969-ல் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டில் ரூ. 2 லட்சம் என்றிருந்தது. அடுத்தாண்டு ரூ. 3 லட்சமாக பெருகியது. 1971–72-ல் ரூ. 2,29,000-ஆக குறைந்தது. அதற்குக் காரணம் தவிட்டின் விலை ஏறிவிட்டது. ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறிவிட்டது. ஊழியர்களின் சம்பளமும் ஏறியிருக்கிறது. அதனுல் 1971–72-ல் லாபம் சிறிது குறைந்திருக்கிறது. ஆனுல் 1972–73-ல் முன்புபோல அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, 72–73-ல் மு.ப 9–3
லாபம் அதிகரிக்கும் என்று அமைச்சர் சொல்வது எந்தக் காரணத்தினுல்? ஸ்பேர் பார்ட்ஸ் விலைகள் குறையக்கூடும் என்பதனுலா ? தவிடு விலை குறையும் என்பதனுலா ? தொழிலாளர்களுடைய கூலி விகிதம் குறையக்கூடும் என்பதனுலா ? எதனுல் அப்படி எதிர்பார்க்கிறுர் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இவ்வாண்டு தவிர்த்திருக்கக் கூடிய வேறுசில செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு சரியான முறையில் கண்காணித்தால் அதைத் தவிர்க்க முடியும் என்கிற எண்ணத்தில்தான் சொன்னேன்.

கூட்டுறவு மத்திய வீட்டு அடைமானச் சங்கம்

* 35 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எல்.ஐ.சி. நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீடு அடைமான சங்கத்திற்கு ரூ. 50 லட்சம் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீட்டு அடைமானச் சங்கத்திற்கு, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 1971–72-ஆம் ஆண்டிற்கு ரூ. 1.75 கோடி அனுமதியளித்தது. இத்தொகை பூராவும் சங்கத்துக்கு கொடுக்கப்பட்டு விட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1973 பிப்ரவரி 6

திரு. சு. துரைசாமி : இப்படிப்பட்ட சங்கங்களின் மூலமாக வீடு கட்ட 25 சத விகிதம் முன்பணம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். நடுத்தர மக்களால் அப்படிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அந்த 25 சத விகிதம் என்பதை 10 சதவிகிதம் என்று குறைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வீடு கட்டுவது என்றால் அந்த வீட்டுக்காரர் 25 சத விகிதம் முன்பணம் கொடுக்கிற நிலை அகில இந்திய அடிப்படையில் அமைந்தது. அதைக் குறைப்பதற்கில்லை. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வேறுவகைத் திட்டங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, how long does it take to sanction loan for an application who has applied to the Central House Mortgage Society?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்தக் கடன் 3 தவணைகளாகக் கொடுக்கப்படுகிறது. முதலில் தவணை பெற்று பேஸ் போட வேண்டும். அடுத்த தவணையில் கட்டடத்தின் ரூப் மட்டம் வரை கட்ட வேண்டும். மூன்றாவது தவணை பெற்று கட்டடத்தை முடித்து விடவேண்டும். இந்தக் கடனையும் காலதாமதமின்றியும் தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டுவதற்கு முன்னால் மானியமாகத் தரப்பட்டு வந்ததே, அந்த மானியங்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக இப்போது பலர் வீடு கட்ட முன்வரவில்லை. ஆகவே முன்போலவே மானியத்தை அளிக்க அரசு புனர் பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதற்குத் தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வீட்டுவசதி வாரியத்தில் வேறுவகைத் திட்டங்கள் இருக்கின்றன என்றார். அவை என்ன திட்டங்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நாளைக்கு ஒரு ரூபாய் என்பதாக ஐந்து ஆண்டு காலத்திற்கு கட்டுகிறவர்களுக்கு வீடு என்கிற திட்டம், அப்புறம் பத்தில் ஒரு பங்கைக் கட்டிவிட்டு பாக்கியை தவணை முறையில் கட்டுகிற ஒரு திட்டம் ஆகியவை இருக்கின்றன.

1973 பிப்ரவரி 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மார்ட்கேஜ் பாங்குகள் மூலமாக அதிக பட்சம் எவ்வளவு லோன் கொடுக்கிறார்கள்? குறைந்த பட்சம் எவ்வளவு லோன் கொடுக்கிறார்கள் என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எல்.ஐ.சி., எம்.ஐ.ஜி. ஸ்கீம்படி வீடு கட்ட பணம் குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயும், அதிகபட்சம் 20 ஆயிரம் ரூபாயும் அளிக்கப்படுகிறது. அதிகபட்சம் இருபதாயிரம் என்பதைத்தான் 25 ஆயிரம் என்று உயர்த்த இப்போது தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : செய்திச் சுருள்கள் மூலமாக எதை எதையோ படம் எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும் இதுபோன்ற எந்த எந்த வகையில் வீடு கட்ட பண உதவி பெற்று வீடு கட்டிக் கொள்ளலாம் என்பதைச் செய்திச் சுருள்கள் மூலமாகப் படம் எடுத்து மக்களுக்கு இந்த விவரங்களை எல்லாம் தெரியச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அங்கங்கே விழாக்கள் நடக்கிறபோது இந்த விவரங்கள் எல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. பத்திரிகை வாயிலாகவும் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

Supply of power to Madras Aluminium Factory

* 36 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether electricity is supplied at a concessional rate to the Madras Aluminium Factory at Mettur?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 72–73-ஆம் ஆண்டுக்கு மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு மின்சாரம் சப்ளை செய்யப்பட்ட காரணமாக நமது வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1959–60-ஆம் ஆண்டு மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு அளிக்கப்படுகிற மின்சக்திக்கு முதல் 10 ஆயிரம் யூனிட் வரை 1.5 காசாகவும், அதற்கு மேற்பட்டு, 25 ஆயிரம் யூனிட் வரை 2.5 காசாகவும் வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சலுகை மூலம் எவ்வளவு இழப்பு என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.